Mufassal Bus Stand at Broadway

* 304 Q.—DR. H. V. HANDE:
THIRU K. A. WAHAB: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether this Government have any proposal to remodel the Mufassal Bus Stand at Broadway?

(b) if so, the details thereof; and

(c) the total number of incoming and outgoing buses per day therein?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) சென்னை மாநகராட்சி பிராட்வேயிலுள்ள புறப்பகுதி பேருந்து நிலையத்தை புது மாதிரியாக அமைக்க உத்தேசித்துள்ளது.

(இ) விவரங்கள் உருக்கொடுக்கப்பட்டு வருகின்றன.

(உ) ஒவ்வொரு நாளும் பேருந்துகள் புகுவன நூற்று இரண்டும், புறப்படுபவை அதற்குச் சமமான எண்ணிக்கையும் ஆகும்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, பிராட்வேயிலுள்ள இந்த வெளியூர் பேருந்து நிலையம் மிகவும் நெருக்கடியாகயிருப்பதால் அதை விரிவடையச் செய்தாலும்கூட பல சிரமங்கள் ஏற்படும். ஆகவே அந்த இடத்தை மிகவும் பரவலாக உள்ள மூர்மார்க்கெட் அருகிலாவது அல்லது மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற்று தீவுத் திடலிலாவது அமைக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே இந்த பிராட்வே பேருந்து நிலையத்தை சீர்திருத்தி மாற்றியமைப்பது, வேறு இடத்திற்கு மாற்றுவது போன்ற கருத்துக்கள் சென்ற 10, 12 ஆண்டு காலமாக இருக்கிறது. முதலில், சைதாப்பேட்டையில் ஒரு பேருந்து நிலையமும், திருவொற்றியூரில் ஒரு பேருந்து நிலையமும், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஒரு பேருந்து நிலையமும் ஆக 3 பகுதிகளாக வைக்கலாம் என்று கருத்து இருந்தது. ஆனல் அப்படிச் செய்தால் வருகிறவர்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது என்று கருதப்பட்டு பிறகு அந்தத் திட்டத்தை மாற்றி பிராட்வே பேருந்து நிலையத்தை விரிவு படுத்துவது என்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காக போட்ட திட்டம் 13,95,000 ரூபாய் என்று போட்டிருக்கிறது. இது தலைமைப் பொறியாளரின் ஆய்வில் இருக்கிறது. அதில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று தலைமைப் பொறியாளர் மாநகராட்சி மன்றத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். மாநகராட்சி மன்றம் 6 இலட்சம் ரூபாய் கடன்

1971 டிசம்பர் 13]

வேண்டுமென்று கேட்டிருக்கிருர்கள். இது பரிசீலனையில் இருக்கிறது. விரைவிலே முடிவெடுக்கப்பட்டு பிராட்வேயைச் சீர்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்தப் பிராட்வே பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்த ஏற்பாடுகள நடக்கின்றன என்று சொன்னர்கள். அங்கு பல ஆண்டுகளாக கூடை பின்னுகிறவர்கள், தட்டி பின்னுகிறவர்கள் போன்றவர்கள் இருக்கிருர்கள். அவர்களுக்கு என்ன வசதிகள் செய்து கொடுக்கப் போகிருர்கள் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்களுக்கு வேறு மாற்று இடம் ஏதாவது பார்த்துத் தரவேண்டுமே தவிர, அந்தப் பேருந்து நிலையம் நீண்ட நாட்களாக மக்களுக்கு அசௌகரியமான தன்மையில் அமைந்திருக்கிறது. பஸ்கள் வந்தாலும். பயணிகள் தங்குவதற்கோ அல்லது பஸ்களைப் பிடிப்பதற்கோ அல்லது அவர்களுக்கு ஓய்வு பெறவோ அங்கு வசதி வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அங்குதான் பேருந்து நிலையத்தினை சீர்படுத்தி அமைக்க வேண்டும். கூடை பின்னுகிறவர்கள், மற்றவர்களுக்கு மாற்று இடம் பார்த்துத் தர வேண்டும். அதை நகராட்சி மன்றம் முறைப்படி கவனிக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பல ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து வருகிறோம், ஆராய்ந்து வருகிறோம் என்ற பதிலைத்தான் நாம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். எனவே, குறைந்த பட்சம் இந்த ஆண்டிலாவது அதைச் சீர்படுத்துவதற்காக அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுக்குமா ? அதற்கு எவ்வளவு காலமாகும் என்பதை தயவுசெய்து அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சிமன்றம் அதற்கான திட்டத்தைத் தீட்டிவிட்டது. சிலபல மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று தலைமைப் பொறியாளர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். சென்ற ஆண்டு ஒரு நாள் கூட குறிப்பிடப் பட்டது அடிக்கல் நாட்டுவதற்காக. அரசாங்கத்தின் அனுமதி இல்லாததால், அதைப் பெற்று விட்டு பிறகு அடிக்கல் நாட்டலாம் என்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

நகராட்சிப் பேருந்து நிலையங்கள்

*** 305 வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சிப் பேருந்து நிலையம் கட்ட அந்த நகராட்சியால் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?